சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா. 02 திரு. ஆனந்தக்குமார் த /பெ சுந்தரேசன் , வயது 37

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .–**

. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. புகார் தாரர் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சத்தியப்பிரமான வாக்குமூலம் வழக்கறிஞர் தயார் செய்தது என்றால் சரிதான். அவரது அலுவலகத்தில் நான் விவரங்கள் தெரிவித்ததின் பேரில் வழக்கறிஞர் தயார் செய்தார். நானும் புகார் தாரரும் நீண்ட கால நண்பர்கள் என்றால் சரிதான். எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் புகார்தார் மூலமே தெரியும் என்றாலும் சரிதான். எதிரியின் விவரங்கள் எனக்கு நேரடியாக எனக்கு தெரியும் என்று சத்தியபிரமான வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தால் தவறு என்றால் சரியல்ல. புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்ததை நான் நேரடியாக பார்க்க வில்லை என்றால் சரியல்ல. நான நேரடியாக பார்த்தேன் எந்த இடத்தில் புகார் தாரர் எதிரிக்கு பணம் கொடுத்தார் என்று முதல் விசாரணையில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் புகார்தாரருக்கும் எவ்வாறு பழக்கம் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் சீட்டு நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியும். அந்த சீட்டு SMS Chits என்ற பெயரில் நடத்தி வந்தார். சீட்டு நடத்துவதற்கு புகார்தாரர் உரிமம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் நடத்தி வந்த சீட்டில் எதிரியும் பணம் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். பொதுவாக சீட்டு நடத்தும் போது சீட்டில் பணம் செலுத்துவோர்களிடம் இருந்து ஈடாக பாண்டு மற்றும் காசோலை பெறுவது வழக்கம் என்றால் சரிதான். புகார்தாரர் நடத்தி வந்த சீட்டை எதிரி எடுத்த விவரம் எனக்கு தெரியும். மாதம் மாதம் சீட்டில் பணம் செலுத்துவதற்கு அட்டையில்

இரசீது வைப்பார்கள் என்றால் சரிதான். அதேபோல் எதிரி சீட்டில் சேர்ந்ததால் பொருப்புறுதியாக பாண்டு மற்றும் காசோலை வழக்கம் போல் எதிரியிடம் இருந்தும் பெறப்பட்டது என்றால் சரிதான். எதிரியின் கணவர் மீது புகார்தார் திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் ஒரு பாண்டு வழக்கு தொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் ஊதுபத்தி தொழில் செய்து வருகிறார். அவ்வாறு ஊதுபத்தி தொழில் செய்வதற்கு புகார்தாரர் அனுமதி பெற்றுள்ளார். புகார்தாரர் தனது தொழில் ரீதியான பண பரிவர்தனை அனைத்தும் வங்கியின் மூலமாக செய்து வந்தார் என்றால் சரிதான். புகார்தாரர் HDFC மற்றும் இந்தியன் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். நான் கூறுவதுபோல் புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்ததாக நான் கூறுவது பொய் என்றாலும், புகார்தாரர் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு புகார்தாரர் பணத்தை வங்கி மூலமாக கொடுத்தாரா என்றால் இல்லை. ரொக்கமாக கொடுத்தார். புகார்தாரருக்கு அந்த பணம் எவ்வாறு வந்தது என்றும் எந்த வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சீட்டு நடத்துவதற்கு பொருப்புறுதியாக கொடுத்த காசோலையை புகார்தாரர் தவறாக பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியும் புகார்தாரரும் ஒரே தனியார் வங்கியில் பணியாற்றினார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு நிலைக்கதக்கது என்றால் சரியல்ல.

Signature of Witness